**அ.வ.எண். 195/2023**
**பி.வா.சா.1 : சத்தியமூர்த்தி**
**தேதி : 12.06.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் விவசாயம் செய்து வருகிறேன். வாதி பரமசிவத்தையும், இரண்டாம் பிரதிவாதி பழனிச்சாமியையும் எனக்கு தெரியும். கடந்த 04.12.1995 ல் இரண்டாம் பிரதிவாதி பழனிச்சாமி உங்களுக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். கடந்த 10.12.1995 ல் இரண்டாம் பிரதிவாதியிடமிருந்து வா.சா.ஆ.3 கிரையம் ஆவணப்படி பெற்று அந்த சொத்தினை நீங்கள் வீட்டு மனைகளாக பிரித்துள்ளீர் என்று சொன்னால் சரிதான். நீங்கள் அவ்வாறு பிரித்த மனைகளில் சில மனைகளை வாதி பரமசிவத்திற்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். அந்த ஒப்பந்த பத்திரம் தான் வா.சா.ஆ.4 என்று சொன்னால் சரிதான். அது 03.03.2023 ஆம் தேதி வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். ரூபாய் 3078575/– என்று கிரையத்தொகை நியமனம் செய்து பேசப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் நான், பரமசிவம், சாட்சிகள் கந்தசாமி, தனலட்சுமி மற்றும் வழக்கறிஞர் ஆகியோர் இருந்தோம். கிரையம் பெறுவதற்கு வாதி கிரையம் பெறுவதற்காக முன்தொகையாக ரூ.25,78,575/– கொடுத்தார். கிரைய ஒப்பந்த தேதியிலிருந்து 4 மாதங்கள் கழித்து கிரையம் செய்து கொள்வதாக கிரைய

ஒப்பந்த்தின் போது பிரதிவாதி ஒப்புக்கொண்டார். வா.சா.ஆ.5 மூலம் வாதி கிரையம் செய்து கொடுக்கும்படி வாதி எனக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். கடந்த 30.06.2023 தேதியன்று வாதி கிரையம் பெறுவதற்காக சார்பதிவாளர் கரூர் இணை –1 ல் டோக்கன் செய்து வைத்திருந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. உங்களுக்கு மேற்சொன்ன தேதியில் கிரையம் செய்யும் விவரம் குறித்து தகவல் கிடைத்தும் நீங்கள் காலம் தாழ்த்த வேண்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி தாவா சொத்தை கிரைய மீதி தொகை ரூ.5,00,000/– கொடுத்து கிரையம் செய்ய தயாராக இருந்தும் நீங்கள் தான் கிரையம் செய்ய தயாராக இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யான தகவல்களை சொல்லி பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/—K.H.இளவழகன்,
மாவட்ட நீதிபதி,
கரூர்.